# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.6/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | இசக்கி |
| Father's Name | : | சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.06.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 20.09.2019 தேதியில் கிராம உதவியாளர் பண்டாரம் அவர்களுக்கு வாதியால் அனுப்பப்பட்ட பதிவு தபால் சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கிராம உதவியாளர் பண்டாரம் அவர்கள், வாதியால் அனுப்பப்பட்ட பதிவு தபால் சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 28.11.2020 தேதியில் பிரதிவாதிகளுக்கு வாதியால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பிரதிவாதிகள் பதிவுத்தபாலை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் (எண்ணம்-2) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 04.12.2020 தேதியில் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**